2nd November 1966]

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANDRADIAR : (a) Yes.

(b) There were some irregularities in accounts resulting in a loss of Rs. 1,313.01.

திரு. வை. சங்கரன் : இதற்கு யார் பொறுப்பு என்று கண்டு பிடிக்கப்பட்டு விட்டதா? அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை கள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : கேஸ் ரிஜிஸ்டர் செய்திருக்கிறது. விஜயராகவன் என்ற அசிஸ்டென்ட் காரணமாக அவர் தவறு காரணமாகத்தான் இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது.

நாகர்கோவிலில் பஸ் நிலையம்

*340 கேள்வி.—திரு. நா. சௌந்திரபாண்டியன் : கனம் தலநிர் வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் ஒரு பொது பஸ் நிலையம் அமைக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்னென்ன?

(இ) பஸ் நிலையம் எப்போது அமைக்கப்படும்?

THE HON. SRI S. M. A. MAJID : (a) & (b) The draft declaration for acquisition of certain lands required for the exit and entrance of the Nagercoil bus stand has since been approved by the Government and the bus stand will be opened soon after the acquisition of the lands.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : அந்த பஸ் நிலையத்தை இந்த வருடத்திற்குள் திறக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இன்னும் இரண்டு மாதங்களுக் குள் நடக்கலாம். அதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கைகள், நில ஆர்ஜிதத்தைத் துரிதப்படுத்த சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. இரா. பொன்னப்ப நாடார் : சார், இதற்கு அடிக்கல் போட்டு எத்தனை வருடங்கள் ஆயிற்று என்பதை அமைச்சர் அவர்கள் தெரி விப்பார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அடிக்கல் போட்டு எத்தனை வருடங்கள் ஆயிற்று என்கிற விவரங்கள் என்னிடமில்லை. டைரக் டர் ஆஃப் டௌன் பிளானிங் அவர்களிடம் இந்தத் திட்டம் அனுப்பப்பட்டு அப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.